**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**

முன்னிலை: **திரு.பி.பார்த்தசாரதி, பி.எல்,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, சிவகங்கை

2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29–ம் நாள் வியாழக்கிழமை

2057, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், தை மாதம் 15–ம் தேதி

இடைநிலை மனு எண்.2/2025

இன்

அசல் வழக்கு எண்.01/2016

* * * * *

உஷாராணி .......மனுதாரர்/3–ம் பிரதிவாதி

/ எதிர் /

1. ஜெயலெட்சுமி
2. பாண்டி .......1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. பிரபாதேவி
4. முனியாண்டி (எ) சந்திரன்
5. சிவசாமி பிள்ளை .......எதிர்மனுதாரர்கள்/1, 2, 4 பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 23.01.2026 ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/3–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.L.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.வெங்கடேஷ் அவர்கள் ஆஜராகியும், 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தில் ஒருதலைபட்சமாக கருதப்பட்டுள்ளார்கள். 5–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இறந்து விட்டார். இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உ த் த ர வு

இம்மனுவானது மனுதாரர்/3–ம் பிரதிவாதியால் அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய மனுதாரர்/3–ம் பிரதிவாதி/DW1–ஐ ரீகால் செய்ய அனுமதிக்க கோரி

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/3–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் 3–ம் பிரதிவாதி. அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணை நடைபெற்று வருகிறது. அதில் மனுதாரர்/3–ம் பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணையில் மனுதாரர்/3–ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டு அடுத்த சாட்சிய விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் 4–ம் பிரதிவாதிக்கு 1–ம் வாதி, 1–ம் பிரதிவாதி, மனுதாரர்/3–ம் பிரதிவாதியின் கணவர் பூவலிங்கம் ஆகியோர்கள் எழுதி கொடுத்த பதிவு பொது அதிகாரப் பத்திரம் மற்றும் 4–ம் பிரதிவாதி தாவாச் சொத்துக்களைப் பொறுத்து எழுதி வைத்த பதிவு உயில் ரத்து ஆவணம் ஆகிய இரு ஆவணங்கள் பற்றிய விபரங்கள் தற்போது தான் மனுதாரர்/3–ம் பிரதிவாதிக்கு தெரிய வந்தது. பின்னர் மனுதாரர்/3–ம் பிரதிவாதி உடனடியாக உரிய அலுவலகத்தில் மனு தாக்கல் செய்த சான்றிட்ட நகல் பெற்று தாக்கல் செய்கிறார். மனுதாரர்/3–ம் பிரதவாதி தரப்பில் வாதத்தை மெய்பிக்கும் வகையில் ஆவணங்கள் குறித்து சட்சியம் அளிக்கவும், ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சான்றாவணங்களாக தாக்கல் செய்ய ஏதுவாய் பி.வா.சா.1–ஆக சாட்சியம் அளித்த மனுதாரர்/3–ம் பிரதிவாதியை ரீகால் செய்ய அனுமதியளிக்க வேண்டி இம்மனு மனுதாரர்/3–ம் பிரதிவாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–**

1, 2 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். இந்த சொத்துக்கள் 4–ம் பிரதிவாதியின் இறந்த போன மனைவிக்கு சொந்தமானது. அவர் அவருடைய

ஆயுட்காலத்தில் சொத்துக்களை அவர் மகள், மருமகன் மற்றும் மருமகளின் பெயரில் எழுதிக் கொடுத்துவிட்டார். எனவே அந்த சொத்தில் கணவருக்கு எந்த உரிமையும் இல்லை. 4–ம் பிரதிவாதிக்கு 1–ம் வாதி, 1–ம் பிரதிவாதி, மனுதாரர்/3–ம் பிரதிவாதியின் கணவர் பூவலிங்கம் ஆகியோர்கள் எழுதி கொடுத்த பதிவு பொது அதிகாரப் பத்திரம் மற்றும் 4–ம் பிரதிவாதி தாவாச் சொத்துக்களைப் பொறுத்து எழுதி வைத்த பதிவு உயில் ரத்து ஆவணம் ஆகிய இரு ஆவணங்கள் செல்லாதவையாகும். இந்திய வாரிச சட்டம், 1925–ன் பிரிவு 70–ன் படி உயில் எழுதி வைத்த நபர் அவருடைய வாழ்நாளில் அவர் மட்டுமே ரத்து செய்ய உரிமையுடையவர். 4–ம் பிரதிவாதிக்கு எழுதி வைக்கப்பட்ட பொது அதிகார பத்திரம் பதிவு செய்யப்படாதவை. மேலும் மேற்படி பொது அதிகார பத்திரத்தில் மகள், மருமகன் போன்ற யாரும் கையொப்பம் இடவில்லை. மனுதாரர்/3–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்படும் இந்த ஆவணங்கள் இந்த வழக்கில் குழப்பத்தை விளைவிக்கும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யக்கோரி 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதியால் இந்த எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

5) இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்/3–ம் பிரதிவாதி சார்பில் அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணை நடைபெறுகிறது. அதில் மனுதாரர்/3–ம் பிரதிவாதி, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் மற்ற சாட்சிகள் விசாரணைக்கு வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் 4–ம் பிரதிவாதிக்கு, 1–ம் வாதி, 1–ம் பிரதிவாதி, மனுதாரர்/3–ம் பிரதிவாதியின் கணவர் ஆகியோர்கள் எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரம் மற்றும் 4–ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை பொறுத்து எழுதிக் கொடுத்த உயில் ரத்து ஆவணம் பற்றி

தற்போது தான் தெரிய வந்தது. எனவே உடனடியாக உரிய அலுவலகத்தில் சான்றிட்ட நகல் பெற்று மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். எனவே மேற்படி ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் ஆவணங்களாக சேர்க்க பி.வா.சா.1–ஐ மீண்டும் அழைக்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

6) 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் சார்பில் தாவா சொத்துக்குரிய உரிமையாளர்கள் இறந்து போன 4–ம் பிரதிவாதியின் மனைவியுடையது. அவர் உயிருடன் இருந்த காலத்தில் அவருடைய ஆயுட்காலத்தில் இந்த சொத்துக்களை பொறுத்து அவருடைய மகள், மருமகன், மருமகளுக்கு உயில் எழுதி வைத்துள்ளார். எனவே அவருடைய கணவருக்கு அவருடைய ஆயுட்காலத்தில் எந்த உரிமையும் இல்லை. 4–ம் பிரதிவாதி எழுதிய ஆவணத்தை ரத்து செய்ததாக சொல்லும் ஆவணத்தையும், பதிவு செய்யாத பொது அதிகார பத்திரத்தையும் தாக்கல் செய்துள்ளார். உயில் எழுதி வைத்தவருக்கு தான் அவருடைய ஆயுட்காலத்தில் அந்த ஆவணத்தை ரத்து செய்ய அதிகாரம் உள்ளது. 4–ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ள பொது அதிகார பத்திரம் பதிவு செய்யாதது. ஆகையால் அவை ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. எனவே மனுதாரர்/3–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்படும் ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

7) மனுதாரர்/3–ம் பிரதிவாதி சார்பில் பி.வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார். இம்மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ள கூடியதா? இல்லையா? என்பதை சாட்சிகள் விசாரணையின் போது தீர்மானித்து கொள்ளலாம் என்று முடிவு செய்து, அசல் வழக்கு தாக்கல் செய்து சுமார் 10 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், பி.வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து,

இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக் கொண்டு, அசல் வழக்கு விசாரணையின் போது முடிவு செய்யலாம் என்று முடிவு செய்து தற்போது நிலையில் நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**8) இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக சுருக்கெழுத்து வடிவில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்.பெ.பார்த்தசாரதி,**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு</u>**
**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை.

**ஓம்.பெ.பார்த்தசாரதி,**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**(//Sd.P.Parthasarathy)**
**29.01.2026** **Additional District Judge, Sivagangai**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்**
**சிவகங்கை**
**இடைநிலை மனு எண்.02/25**
**இன்**
**அசல் வழக்கு எண்.01/2016**
**நாள்.29.01.2026**

**(//Sd.P.Parthasarathy)**
**29.01.2026** **Additional District Judge, Sivagangai**